## பாரதியார், எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி பெயர்களில் விருதுகள்!

# 3 ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் அறிவிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கி சிறப்பிப்பு!

சென்னை, செப்.26-

2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் மற்றும் பாரதியார், எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் பாலசரசுவதி ஆகியோர் பெயரில் வழங்கப்படும் அகில இந்திய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அடுத்த மாதம் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் விழாவில் விருதாளர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்படும்.

இது குறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு அரசின் சார்பாக தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் பல்வேறு கலைப் பிரிவுகளைச் சேர்ந்த சிறந்த கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள் வழங்குவதுடன், பாரதியார், எம்.எஸ். சுப்புலட்சுமி பாலசரசுவதி ஆகியோர் பெயர்களில் அகில இந்திய விருதுகள் அறிவிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும், சிறந்த கலை நிறுவனத்திற்கு கேடயமும், சிறந்த நாடகக்குழுவிற்கு சுழற்கேடயமும் வழங்கப்படுகின்றன.

தற்போது, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் வழங்கப்படவுள்ளது. கலைமாமணி விருது வழங்கக்கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் இயல், இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம், சின்னத்திரை, இசை நாடகம், கிராமியக் கலைகள் மற்றும் இதர கலைப் பிரிவுகள் என கலைப் பிரிவு வாரியாக பிரிக்கப்பட்டு, கலைமாமணி விருது பெறத் தகுதியுள்ள கலைஞர்களைத் தேர்வு செய்திட கலைப் பிரிவு வாரியாக வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டன.

மேற்படி வல்லுநர் குழுக்களால் அளிக்கப்பட்ட தகுதியுள்ள கலைஞர்களின் பெயர்ப் பட்டியல் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இயற்றப்பட்ட தீர்மானம் மற்றும் பரிந்துரையை ஏற்று 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் பெறும் விருதாளர்களின் பெயர் பட்டியல் இணைப்பில் கண்டவாறு தமிழ்நாடு அரசு இன்று (24.09.2025) வெளியிட்டுள்ள அரசாணையில் அறிவித்துள்ளது. கலைமாமணி விருது பெறும் கலைஞர்களுக்கு 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் விருது பட்டயம் வழங்கப்படும்.

மேலும், பாரதியார். எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் பாலசரசுவதி ஆகியோர் பெயரில் வழங்கப்படும் கலை வித்தகர்களுக்கான அகில இந்திய விருதுகளும் கீழ்க்கண்டவாறு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

| சிறப்பு விருது | கலை வித்தகர்கள் பெயர் |
|---|---|
| பாரதியார் விருது (இயல்) | முனைவர் ந.முருகேச பாண்டியன் |
| எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது (இசை) | பத்மபூஷன் டாக்டர் கே.ஜே. யேசுதாஸ் |
| பாலசரசுவதி விருது (நாட்டியம்) | பத்மஸ்ரீ முத்துகண்ணம்மாள் |

அகில இந்திய விருது பெறும் கலை வித்தகர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலையுடன், 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம் வழங்கப்படும்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் வழங்கப்படும் சிறந்த கலை நிறுவனத்திற்கான கேடயம் மற்றும் சிறந்த நாடகக் குழுவிற்கான சுழற் கேடயம் பெறுவதற்குரிய கலை நிறுவனம் மற்றும் நாடகக் குழு கீழ்க்கண்டவாறு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சிறந்த கலை நிறுவனம் | தமிழ் இசைச் சங்கம், சென்னை (ராஜா அண்ணாமலை மன்றம்) |
| சிறந்த நாடகக் குழு | கலைமாமணி எம்.ஆர். முத்துசாமி நினைவு நாடக மன்றம், பாலமேடு, மதுரை மாவட்டம். |

சிறந்த கலை நிறுவனத்திற்கு வழங்கப்படும் கேடயம் மற்றும் சிறந்த நாடகக் குழுவிற்கு வழங்கப்படும் சுழற் கேடயத்துடன் தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்படும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அடுத்த மாதம் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் விழாவில், 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள், அகில இந்திய விருதுகள், சிறந்த கலை நிறுவனம் மற்றும் நாடகக் குழுவினருக்கான கேடயங்கள் ஆகியவை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்படும்.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

### 2021 ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பட்டியல்

| கலைத் துறை | கலைஞரின் பெயர் | கலைப் பிரிவு |
|---|---|---|
| இயல் | க. திருநாவுக்கரசு | எழுத்தாளர் |
| | கவிஞர் நெல்லை ஜெயந்தா | இயற்றமிழ்க் கவிஞர் |
| | எஸ்.சந்திரசேகர் (எ) தங்கம்பட்டர் | சமயச் சொற்பொழிவாளர் |
| இசை | பாபநாசம் அசோக் ரமணி | குரலிசை |
| | பா. சற்குருநாதன் ஓதுவார் | திருமுறைதேவாரஇசை |
| | டி. ஏ. எஸ். தக்கேசி | தமிழிசைப் பாடகர் |
| | திருச்சூர் சி. நரேந்திரன் | மிருதங்கம் |
| | என். நரசிம்மன் | கோட்டு வாத்தியம் |
| | கோ. பில்லப்பன் | நாதசுர ஆசிரியர் |
| | திருக்காட்டுப்பள்ளி டி. ஜே. சுப்பிரமணியன் | நாதசுரம் |
| | கல்யாணபுரம் ஜி. சீனிவாசன் | நாதசுரம் |
| | திருவல்லிக்கேணி கே. சேகர் | தவில் |
| நாட்டியம் | வழுவூர் எஸ். பழனியப்பன் | பரதநாட்டிய ஆசிரியர் |
| | திருமதி பிரியா கார்த்திகேயன் | பரதநாட்டியம் |
| நாடகம் | பூச்சி எஸ். முருகன் | நாடக நடிகர் |
| | காரைக்குடி நாராயணன் | நாடக இயக்குநர் |
| | என். ஏ. அலெக்ஸ் | ஆர்மோனியம் |
| திரைப் படம் | எஸ். ஜே. சூர்யா | திரைப்பட நடிகர் |
| | செல்வி சாய் பல்லவி | திரைப்பட நடிகை |
| | லிங்குசாமி | திரைப்பட இயக்குநர் |
| | ஜே. கே. (எ) எம். ஜெயகுமார் | திரைப்பட அரங்க அமைப்பாளர் |
| | சூப்பர் சுப்பராயன் | திரைப்பட சண்டைப் பயிற்சியாளர் |
| சின்னத்திரை | பி. கே. கமலேஷ் | சின்னத்திரை நடிகர் |
| இசை நாடகம் | எம். பி. விசுவநாதன் | இசை நாடக நடிகர் |
| கிராமியக் கலைகள் | வீர சங்கர் | கிராமியப் பாடகர் |
| | திருமதி நா. காமாட்சி | பொய்க்கால் குதிரை ஆட்டம் |
| | எம். முனுசாமி | பெரியமேளம் |
| | பி. மருங்கன் | நையாண்டி மேள நாதஸ்வரம் |
| | கே. கே. சி. பாலு | வள்ளி ஒயில்கும்மி |
| இதர கலைப் பிரிவுகள் | வே. ஜீவானந்தன் | ஓவியர் |

### 2022 ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பட்டியல்

| கலைத் துறை | கலைஞரின் பெயர் | கலைப் பிரிவு |
|---|---|---|
| இயல் | திருமதி சாந்தகுமாரி சிவகடாட்சம் | எழுத்தாளர் |
| | முனைவர் தி.மு. அப்துல்காதர் | இலக்கியப் பேச்சாளர் |
| | சு. முத்துகணேசன் | சமயச் சொற்பொழிவாளர் |
| இசை | திருமதி ஜெயஸ்ரீ வைத்திய நாதன் | குரலிசை |
| | திருமதி சாரதா ராகவ் | குரலிசை |
| | பகலா ராமதாஸ் | வயலின் |
| | நெய்வேலி ஆர். நாராயணன் | மிருதங்கம் |
| | செம்பனார்கோயில் எஸ். ஜி. ஆர். எஸ். மோகன்தாஸ் | நாதசுரம் |
| | சித்துக்காடு டி.ஜி. முருகவேல் | நாதசுரம் |
| | திருக்கடையூர் டி. ஜி. பாபு | தவில் |
| | திருமதி சுசித்ரா பால சுப்பிரமணியன் | கதா காலட்சேபம் |
| நாட்டியம் | திருமதி அமுதா தண்டபாணி | பரதநாட்டிய ஆசிரியர் |
| | வி. சுப்பிரமணிய பாகவதர் | பாகவத மேளா |
| | சுவாமிமலை கே. சுரேஷ் | பரதநாட்டியக் குரலிசை |
| நாடகம் | பொன் சுந்தரேசன் | நாடக நடிகர் |
| | கவிஞர் இரா. நன்மாறன் | நாடக இயக்குநர் |
| | சோலை ராஜேந்திரன் | நாடகத் தயாரிப்பாளர் |
| திரைப் படம் | விக்ரம் பிரபு | திரைப்பட நடிகர் |
| | திருமதி ஜெயா வி. சி. குகநாதன் | திரைப்பட நடிகை |
| | விவேகா | திரைப்பட பாடலாசிரியர் |
| | டைமண்ட் பாபு | திரைப்பட செய்தித் தொடர்பாளர் |
| | டி. லட்சுமிகாந்தன் | திரைப்பட புகைப்படக் கலைஞர் |
| சின்னத் திரை | திருமதி மெட்டிஒலி காயத்ரி | சின்னத்திரை நடிகை |
| இசை நாடகம் | என். சத்தியராஜ் | இசை நாடக நடிகர் |
| கிராமியக் கலைகள் | ந. ரஞ்சிதவேல் பொம்மு | தேவராட்டம் |
| | மு. கலைவாணன் | பொம்மலாட்டம் |
| | எம். எஸ். சி. ராதாரவி | தப்பாட்டம் |
| | கே. பாலு | நையாண்டி மேள நாதஸ்வரம் |
| இதர கலைப் பிரிவுகள் | ஆர். சாமிநாதன் | பண்பாட்டுக் கலை பரப்புனர் |
| | கே. லோகநாதன் | ஓவியர் |

### 2023 ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| இயல் | கவிஞர் கே. ஜீவபாரதி | இயற்றமிழ்க் கவிஞர் |
| இசை | ஆர். காசியப் மகேஷ் | குரலிசை |
| | திருமதி ஹேமலதாமணி | வீணை |
| | வே. பிரபு | கிளாரினெட் |
| | பி. பி. ரவிச்சந்திரன் | நாதசுரம் |
| | ஞான நடராஜன் | நாதசுரம் |
| | எம். எஸ். ஆர். பரமேஸ்வரன் | நாதசுரம் |
| | ராமஜெயம் பாரதி | தவில் |
| | பா. ராதாகிருஷ்ணன் | தவில் |
| நாட்டியம் | திருமதி க. தனசுந்தரி | பரதநாட்டிய ஆசிரியர் |
| | திருமதி வி. ஜெயப்பிரியா | குச்சுப்பிடி நாட்டியம் |
| | கே. ஹரிபிரசாத் | பரதநாட்டியக் குரலிசை |
| நாடகம் | என். ஜோதிகண்ணன் | பழம்பெரும் நாடக நடிகர் |
| | வானதிகதிர் (எ) பெ. கதிர்வேல் | நாடக நடிகர் |
| | வி. கே. தேவநாதன் | விழிப்புணர்வு நாடக நடிகர் |
| திரைப் படம் | கே. மணிகண்டன் | திரைப்பட நடிகர் |
| | எம். ஜார்ஜ் மரியான் | திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| | அனிருத் | திரைப்பட இசையமைப்பாளர் |
| | திருமதி ஸ்வேதா மோகன் | திரைப்பட பின்னணிப் பாடகி |
| | சாண்டி (எ) அ. சந்தோஷ் குமார் | திரைப்பட நடன இயக்குநர் |
| | நிகில் முருகன் | திரைப்பட செய்தித் தொடர்பாளர் |
| சின்னத் திரை | என். பி. உமாசங்கர்பாபு | சின்னத்திரை நிகழ்ச்சித் தொகுப்பாளர் |
| | அழகன் தமிழ்மணி | சின்னத்திரை நிகழ்ச்சி தயாரிப்பாளர் |
| இசை நாடகம் | ஏ. ஆர். ஏ. கண்ணன் | இசை நாடக நடிகர் |
| | திருமதி ஆர். எம். தமிழ்ச் செல்வி | இசை நாடக நடிகை |
| கிராமியக் கலைகள் | கே. எம். ராமநாதன் | தெருக்கூத்து |
| | டி. ஜெகநாதன் | வில்லுப்பாட்டு |
| | சி. மகாமணி | நையாண்டிமேள தவில் |
| | திருமதி ஆ. சந்திரபுஷ்பம் | கிராமியப் பாடல் ஆய்வாளர் |
| இதர கலைப் பிரிவுகள் | சு. தீனதயாளன் | சிற்பி |

---

## சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் – பழங்குடியின

# இளைஞர்களுக்கான ஆதி கலைக்கோல் பயிற்சிப் பட்டறை நிறைவு நாள்!

## அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் நிறைவுரையாற்றினார்!

சென்னை, செப்.26–

சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதிகலைக்கோல் பயிற்சிப் பட்டறையை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 22.9.2025 அன்று தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மற்றும் தாட்கோ தலைவர் நா.இளையராஜா கலந்து கொண்ட தொடக்க விழா நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.



ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் அமைந்துள்ள மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம், ஈரோடு தெற்கு மாவட்டம் – குலவிளக்கு பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ பச்சையம்மன் கோவில் மண்டபத்தில் நேற்று முன்தினம் (24.09.2025) 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமினை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ. பிரகாஷ் துவங்கி வைத்தார்.

நேற்று முன்தினம் (24.09.2025) நிறைவு நாள் விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) நடத்திய இளைஞர்களுக்கான மூன்று நாட்கள் ஆதிகலைக்கோல் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இதனைத் தொடர்ந்து பழைமையான கலைகளையும் அதன் பரிணாம வளர்ச்சியையும் மாணவர்களுக்கு கற்றுத் தரும் ஒரு நிகழ்வாக வடிவமைக்கப்பட்டு நாட்டுப்புறக் கலை, நாடகக் கலை, இலக்கிய கலை மற்றும் காட்சி கலை ஆகிய நான்கு கலைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை கொண்டு மூன்று நாட்கள் பயிற்சி பயிலரங்கம் இம்மையத்தில் நடைபெற்றது. இக்கலைகளின் வழியாக மனித எண்ணங்களின் சிந்தனைகளை இணைக்கும் ஒரு பாலமாகவும், கற்பனையை மேன்மைபடுத்தும் கலைகளை நான்கு பிரிவுகளாக பிரித்து இளைஞர்களுக்கு வழிநடத்தும் நோக்கில் இக்கலைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இக்கலைகள் மண்ணுக்கும் மக்களுக்குமான ஆழமான உறவை, பாரம்பரிய இசைக்கருவிகளின் துடிப்போடு இசைத்து, நடனம் ஆடி மரபின் உயிரோட்டத்தை இளைஞர்களின் உள்ளங்களில் விதைத்து, கலாச்சாரத்தின் வேர்களைப் புதுப்பிக்கும் நாட்டுப்புறக்கலைகளையும், வாழ்க்கை கதைகளையும் சமூக உண்மைகளையும் மேடையேற்றி, சிந்தனைகளையும் உணர்வுகளையும் அனைவருக்கும் கொண்டு சேர்த்து புதிய பாதை அமைத்துக் கொள்ள வழிவகை செய்யும் நாடக கலைகளையும் மற்றும் இலக்கியத்தின் வழியே மனிதர் கண்ட வளர்ச்சியை, மொழியும், கவிதையும் எடுத்துரைத்தன அத்தொன்மையை இந்தக் கலைகள் வழிநடத்தும், இலக்கிய கலைகளையும், வண்ணங்களும் வடிவங்களும் இணைந்து மனித எண்ணங்களின் சிந்தனைகளை இணைக்கும் ஒரு பாலமாகவும், கற்பனையை மேன்மைபடுத்தும் கலைகளை நான்கு பிரிவுகளாக பிரித்து 300 இளைஞர்களுக்கு இப்பயிற்சி பட்டறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் இன்றைய அறிவிப்பின்படி முதற்கட்டமாக ஒவ்வொரு கலைகளிலும் சிறந்து விளங்கிய ஒரு நபரை தேர்வு செய்து நான்கு நபர்களுக்கு தலா ரூ 20000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) க்கான காசோலை வழங்கப்பட்டது.

---

# சேலம் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், செப். 26–

சேலம் மத்திய மாவட்டக் கழக அவசரசெயற்குழுகூட்டம் 27.09.2025 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ஜி.கே.சுபாசு தலைமையில் மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் மாளிகை"யில் நடைபெறவுள்ளது.



இக்கூட்டத்தில் மாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாநகர வட்டக்கழக செயலாளர்கள், மற்றும் இளைஞர் அணியைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



தஞ்சை மாமன்னர் சரபோஜியின் 247 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம் சார்பில் புதிய நூல்களை தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம், ச.முரசொலி எம்.பி ஆகியோர் வெளியிட்டார்கள். இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இராஜாராம், சரசுவதி மகால் நூலக ஆயுள் உறுப்பினர் சிவாஜிராஜா து.போன்ஸ்லே மற்றும் ஒன்றியச் செயலாளர் கார்த்திகேயன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.